# பொதுத் தூதர் கோபிநாத் பிள்ளைக்கு ‘என்யுஎஸ்’ உன்னத சேவை விருது

தமிழவேல்

திரு கோபிநாத் பிள்ளையின் இன்றியமையாத சேவையைப் பாராட்டி சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம் அவருக்கு நேற்று உன்னத சேவை விருது வழங்கி சிறப்பித்தது.

அரசதந்திரி, கல்வியாளர், வர்த்தகர் என பன்முகங்களைக் கொண்டவர் திரு கோபிநாத் பிள்ளை. குறிப்பாக தெற்கு ஆசியக் கல்வி ஆய்வுக் கழகத்தின் முதல் தலைவராக சிங்கப்பூர் –இந்திய வர்த்தக, அரசியல் உறவுகள் வலுவடைய முக்கியப் பங்காற்றியவர் அவர்.

பத்திரிக்கையாளராக, ஆசிரியராக, பொருளியல் நிபுணராக, வர்த்தகராகப் பணி புரிந்துள்ள திரு கோபிநாத், 1980களிலும் 1990களிலும் பல அரசு நிறுவனங்களுக்குத் தலைமைதாங்கி உள்ளார். குறிப்பாக என்டியுசி ஃபேர்பிரைஸ் கூட்டுறவு அமைப்பின் தலைவராக அவர் பொறுப்பு வகித்துள்ளார்.

அதன் பிறகு சொந்த தொழில் செய்ய விரும்பி தொலைநோக்குப் பார்வையுடன் அப்போது வளர்ந்து வரும் வர்த்தகச் சந்தையான இந்தியாவில் வெற்றிகரமாக முதலீடு செய்தார்.

இவற்றைத் தவிர நாட்டுக்கும் சேவையாற்றியுள்ள அவர் 25 ஆண்டுகளுக்கு மேலாக அரச தந்திரியாகப் பணியாற்றியுள்ளார். சிங்கப்பூரிலிருந்து இயங்கும் ஈரானுக்கான தூதராகவும் பின்னர் பாகிஸ்தானுக்கான சிங்கப்பூர் தூதராகவும் பணியாற்றி தற்போது பொதுத் தூதராகவும் இந்தியாவின் ஆந்திரப் பிரதேச மாநிலத்துக்கு சிங்கப்பூரின் சிறப்புத் தூதராகவும் பணியாற்றி வருகிறார் திரு கோபிநாத்.



பொதுத் தூதர் கோபிநாத் பிள்ளை **படம்: தெற்கு ஆசியக் கல்வி ஆய்வுக் கழகம்**

“தெற்கு ஆசியக் கல்வி ஆய்வுக் கழகத்தின் மூலம் சிங்கப்பூரைப் பற்றிய விழிப்புணர்வைத் தெற்கு ஆசியாவுக்கும் குறிப்பாக இந்தியாவைப் பற்றிய விழிப்புணர்வை சிங்கப்பூருக்கும் ஏற்படுத்தி உள்ளது,” என்றார் அவர். தெற்கு ஆசியக் கல்வி ஆய்வுக் கழகத்தின் மூலம் பல அனைத்துலக மாநாடுகளைத் தொடங்கி, இந்தியாவைச் சேர்ந்த அரசியல் தலைவர்களைச் சிங்கப்பூருக்கு வரவழைத்தார்.

இதன் மூலம் இந்தியா பற்றி எதிர்மறையான கருத்துகளைக் கொண்டவர்கள் நேரடியாக அந்நாட்டுத் தலைவர்களிடம் உரையாடி சந்தேகங்களைப் போக்கிக் கொள்ள வழிவகுத்தார்.

பல்கலைக்கழகக் கல்வி தமக்கு வாழ்வியல் பாடங்களையும் கற்றுக்கொடுத்தது என்ற திரு கோபிநாத், அரசியல் மீதும் வேறுபட்ட கருத்துக்கள் மீதும் ஆர்வம் கொண்டவர். அதனாலேயே மாறுபட்ட கருத்துகளைத் தரும் தலைவர்களைக் கழகத்தின் மாநாட்டில் பேச அழைப்பதில் அவர் தயக்கம் காட்டியதில்லை.

உதாரணத்திற்கு, இப்போதைய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 2000ஆம் ஆண்டில் குஜராத்தின் முதலமைச்சராக இருந்தபோது அவருக்கு உலகளவில் பெரும் ஆதரவு இருக்கவில்லை. இருப்பினும் அப்போது இந்தியாவின் எதிர்க்கட்சியைச் சேர்ந்த திரு மோடியைச் சிங்கப்பூருக்கு அழைத்துப் பேச வைத்தார் திரு கோபிநாத்.

இந்தியா பற்றிய விழிப்புணர்ச்சி அதிகரிக்க தங்களது மாநாடுகளில் இந்தியர் அல்லாதவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வந்துள்ளது என்றார் அவர்.

சிறிய நாடான சிங்கப்பூர் தாக்குப்பிடிக்க மற்ற நாடுகளுடன் துடிப்புடன் ஈடுபடுவது அவசியம் என்ற அவர், இன்று சிங்கப்பூர் மிகவும் பாதுகாப்பான, வாழ்வதற்கு உகந்த நாடாகத் திகழ்கிறது என்றார். தகுதிக்கு முன்னுரிமை எனும் கொள்கை சிங்கப்பூருக்குச் சிறப் பாகச் செயலாற்றி வந்துள்ளது என்றும் எதிர்காலத்திலும் இது நிலைத்திருப்பதை அப்போதைய தலைமைத்துவம் கவனத்தில் கொள்ளவேண்டும் என்றார்.

சிங்கப்பூரின் சிறுபான்மை இனத்தவர்கள் பாதிக்கப்படாமல் தகுதிக்கு முன்னுரிமை வழங்கும் வலுவான அரசாங்கம் எதிர்காலத்தில் உருவாகும் என விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

அக்காலத்தைவிட இந்தியர்களின் நிலையும் சிங்கப்பூரில் உயர்ந்துள்ளதைச் சுட்டிய அவர் அதனால் இந்தியர்களைப் பற்றிய மக்களின் பார்வையும் மாறியுள்ளது என்றார். இந்தியாவைப் பற்றி நன்கு அறிந்துள்ள திரு கோபிநாத், தற்போது இந்தியாவில் குறிப்பாக ஆந்திரப் பிரதேசத்தில் நிறைய வர்த்தக வாய்ப்புகள் உள்ளன என்றும் அதன் தலைநகரை உருவாக்க சிங்கப்பூர் உதவி வரும் வேளையில் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது ஆந்திரப் பிரதேச அரசின் கைகளில் உள்ளது என்றும் அவர் சொன்னார். எனினும், இதுபோன்ற போட்டித் தன்மையுடன் இந்தியாவின் மாநிலங்கள் செயல்படுவதற்கு அவற்றின் ஆளுமையில் அடிப்படை மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்றும் அந்த வகையில் ஆளுமை திறன்களுக்குப் பெயர் போன சிங்கப்பூர் இந்திய மாநில அரசுகளுக்கு வழிகாட்ட முடியும் என்றும் அவர் நம்புகிறார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.